பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 18 | செவ்வாய்க்கிழமை | 01.04.2025 | அதிர்வு 239

## பெற்றோல் விலை 10 ரூபா குறைப்பு

எரிபொருள் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்படும் என்று சிபெட்கோ அறிவித்துள்ளது.

இதன்படி, 06



# சட்டவிரோத சொத்துக்களை அரசுடமையாக்கச் சட்டமூலம்

## வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றுக்கு வருகின்றது என்கின்றார் ஜனாதிபதி

சட்டவிரோதமாக ஈட்டிய சொத்துக்களை அரசுடமையாக்கும் சட்டமூலம் ஏப்ரல் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

மாத்தறை வெலிப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதைக் குறிப்பிட்டார். 06



# ஜே.வி.பியும் அநுரவும் சுட்ட வடை இனி வடக்கு, கிழக்கில் பொரியாது!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சுகாஷ் காட்டம்



ஜே.வி.பியின் அநுர சுட்ட வடை, இனி வடக்கு கிழக்கில் பொரியாது எனவும், தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பிக்கள் தகுதியற்றவர்கள் எனவும் ஆளுங்கட்சியை கடுமையாக சாடியுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ்.

அவரது ஊடகவியலாளர் 06

## லாஃப்ஸ் எரிவாயு விலை அதிகரிப்பு




நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில், 06

# புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்தால் இலங்கைக்குப் பாரிய அச்சுறுத்தலாம்!

## மனம் வெதும்புகின்றார் தயாசிறி ஜயசேகரா எம்.பி.



யுத்தத்தின் போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். ஆனால், அது குறித்த விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகலில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களால் நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. 06



பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கையில் முகாமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன. வெளியில் சத்தம் சந்தடியின்றி புலனாய்வுத் தரப்புக்கள் தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றன எனத் தெரிகிறது. இது வழமையான ஒழுங்குதான்.

வலிமையான நாடொன்றின் தலைவர் வரும்போது அந்த நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பு முற்கூட்டியே வந்து காரியத்தில் இறங்குவது தவிர்க்க முடியாதது.

இதற்கிடையில் நான்கு ஹெலிக்கொப்டர்களில் இந்தியப் படையினர் இன்றைய தினம் இலங்கை வருகின்றனர் என்றும், இந்திய விமானப்படையின் இந்த நான்கு ஹெலிக்கொப்டர்களும் அவர்களோடு வரும் 40 படையினரும் அநுராதபுரம் விமான தளத்தில் தரையிறங்குவர் எனவும் தெரிகின்றது. 06

# மாகாண சபை குறித்து இந்தியா எமக்குக் கூற வேண்டியதில்லை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகின்றார்



"மாகாண சபை முறைமை குறித்து இந்தியா எமக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. எனினும், நாம் உறுதியளித்தபடி மாகாண சபை தேர்தலை நடத்துவோம்"என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனியார் விடுதி ஒன்றில் சந்தித்த வேளை ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்நாட்டில் போர் நடந்தபோது, படைத் தரப்பாலும் விடுதலை புலிகளாலும் புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட பல அமைப்புகளாலும் பல்வேறு முரணான செயல்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின்போது அவ்வாறு மனித உரிமைகள், விதிகள் மீறல் இடம்பெறும். இது தொடர்பில் உள்நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

சில நாடுகளால் விதிக்கப்படும் தடைகளால் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என நான் நினைக்கவில்லை. இதனால் நாட்டில் உள்ள இனவாதிகளுக்கே சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவது நல்ல விடயமாகும். அவர் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார். திருகோணமலையில் சூரிய மின் திட்டம், வடக்கு ரயில் பாதைக்குரிய சமிக்ஞைகள் பொருத்தப்படுதல் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்காகவே அவர் வருகை தரவுள்ளார்.

மாகாண சபை முறைமை என்பது உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதனை இந்தியா எமக்குக்கூற வேண்டிய அவசியம் கிடையாது. மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என நாம் எமது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் பெரும்பாலும் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம். நாம் ஏற்கனவே மக்களுக்கு உறுதியளித்துள்ளோம்.

ஆகையால், அதனை இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை கிடையாது. நான் அறிந்த வரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை – என்றும் கூறினார்.

# தமிழ் – சிங்கள புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளுக்கான வழிகாட்டல்கள் வெளியீடு

2025 தமிழ் – சிங்கள புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அடங்கிய வழிகாட்டல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

தமிழ் – சிங்கள புத்தாண்டு விளையாட்டுகளில் பங்கேற்பவர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு விபத்துகள் மற்றும் கடுமையான நோய் நிலைமைகளை தவிர்க்கும் நோக்கில் இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவு தெரிவித்தது.

ஒவ்வொரு விளையாட்டு நிகழ்விலும் கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிளோட்டப் பந்தயங்கள் உள்ளிட்ட விசேட விளையாட்டு நிகழ்வுகளின் போது பின்பற்ற வேண்டிய விடயங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இந்த வழிகாட்டல்கள் விளையாட்டுகளின் போட்டித்தன்மையையும் ஆர்வத்தையும் அதிகரிப்பதுடன் ஒவ்வொரு விளையாட்டிலும் பாதுகாப்பாக பங்கேற்பதற்கு அனைவரையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

# பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு



நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பால், பால் தேநீரின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கும் என அந்த சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்திருந்தார்.

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணியை விடுவிக்க உத்தரவு

நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டு புத்தளம் மேல் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சட்டத்தரணியை உடனடியாக விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ரஜீவ அமரசூரிய தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவர் முகமது லாபர் தாஹிர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேலும், சட்டத்தரணி விடுதலையான பிறகு ஏப்ரல் 28 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட ஆலோசகர் சட்டத்தரணி ஜி.ஜி. அருள்பிரகாசத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் பைசர் முஸ்தபா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவுடன் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பயிஸ் முஸ்தபா முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

கடந்த 28 ஆம் திகதி பிணை மனு தொடர்பில் புத்தளம் மேல் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி உதயங்கனி, நீதிமன்றத்தை அவமதிப்பு செய்தார் எனக் குற்றம் சாட்டி, அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பிறகு, பிணை அனுமதி வழங்கப்பட்டதாக அறிந்துக்கொள்ள முடிந்ததாக மனுதாரர் கூறினார்.

இருப்பினும், அன்றைய தினம் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாததால், சம்பந்தப்பட்ட சட்டத்தரணி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஒரு முறையான நடைமுறை இருப்பதாக மனுதாரர் சுட்டிக்காட்டியதோடு, மேலும் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்யும் போது மேல் நீதிமன்ற நீதிபதி அந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகத் தெரிவதாகவும் கூறினார்.

அதன்படி, இந்த மனுவை விசாரிக்க அனுமதி அளிக்கவும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தொடர்புடைய சட்டத்தரணியை விடுவிக்க வாரியபொல சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவும் மனுவில் மேலும் கோரப்பட்டது.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, பின்னர் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் மறுசீரமைப்பு காலம் நிறைவு

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் மறுசீரமைப்பிற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட காலஅவகாசம் நேற்றுடன் நிறைவடைந்தது.

பராட்டே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நேற்று வரை இடைநிறுத்தி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து இந்த சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டது.

உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் கடன் தகவல் பணியகத்துடன் இணைந்து கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பொருத்தமான வழிமுறைகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்நிலையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இது வரையிலும் வணிக வங்கிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடாத தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் மறுசீரமைப்பிற்காக நேற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்தது.






# கழிவுகளை முறையற்ற வகையில் கொட்டுவோரை அடையாளப்படுத்துங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்

## பொலிஸார் ஆளுநரின் கூட்டத்தில் தெரிவிப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான மார்ச் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு முக்கிய முடிவுகள் எட்டப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடன் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தில், சுற்றுச்சூழல் பொலிஸார், விலை மதிப்பீட்டுத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதிகளை அடுத்த கூட்டத்துக்கு அழைக்கவேண்டும் என விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தக் கூட்டத்தில் தொடர்புடைய தரப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய சிறிய தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாது மக்கள் என்னை வந்து சந்திக்கின்றனர். அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்காகவே இருக்கின்றன. சேவையை சிறப்பாக செய்யுங்கள் எனக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கடைகளுக்கான வைப்புப் பணத் தொகையை உயர்வாக நிர்ணயித்துள்ளமை தொடர்பாக பல்வேறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டமை மற்றும் ஆளுநருக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. உள்ளூராட்சிமன்றங்களின் பிரதிநிதிகள் அது தொடர்பான தமது நிலைப்பாடுகளை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

உள்ளூராட்சிமன்றங்கள் சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேணுவது தொடர்பான விடயம் ஆராயப்பட்டது.

குறிப்பாக செம்மணி, வல்லைவெளி, கைதடி – கோப்பாய் வீதிகளில் கோழிக்கழிவுகள் முறையற்ற வகையில் கொட்டப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதே போன்று பல்வேறு இடங்களிலும் குப்பைகளைக் கொட்டுவது தொடர்பிலும் தெரியப்படுத்தப்பட்டது. இவ்வாறு கழிவுகளைக் கொட்டுபவர்களையும், குப்பைகளைக் கொட்டுபவர்களையும் அடையாளப்படுத்திதருமாறும் தம்மால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும் எனவும் சுற்றுச்சூழல் பொலிஸார் இதன்போது குறிப்பிட்டனர்.

முக்கியமான சந்தைகளை அண்மித்த பகுதிகளிலும், சில பிரதான வீதிகளிலும் முறையற்ற விதத்தில் வாகனங்கள் தரித்து நிறுத்தப்படுவதாகவும் இதனால் நெரிசல்கள் ஏற்படுகின்றது என்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் சுட்டிக்காட்டினர்.

பொலிஸார் பற்றாக்குறை இருக்கின்றது என்றும் குறிப்பாக பாடசாலை நாள்களில் பாடசாலைச் சூழலில் கடமையில் ஈடுபடவேண்டியிருப்பதால் இந்த நிலைமை இருக்கின்றது என்றும் பொலிஸார் பதிலளித்தனர்.

தற்போதைய நிலைமையில் பாடசாலை இல்லாத நாள்களிலாவது அந்தப் பகுதிகளில் கடமைகளில் ஈடுபடுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார். மேலும் சாட்டி உள்ளிட்ட பல்வேறு கடற்கரைகளிலும் விடுமுறை நாட்களில் அதிகளவானோர் வரும் நிலையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் சமர்ப்பிக்கும் கட்டட விண்ணப்பங்களின் அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையால் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையில் பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகக் கூறப்பட்டதுடன், அவசர தேவைக்குரிய விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்குமாறும், எதிர்காலத்தில் இதனை நிகழ்நிலை ஊடாக மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

உரிய ஆவணங்கள், வரைபடங்களுடன் உள்ளூராட்சி மன்றங்கள் தயாராக இருந்தால் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் விரைவாக ஆதனமதிப்பீடு மேற்கொள்ள முடியும் என விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதேநேரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் விரைவாக சோலைவரி மீளாய்வை நிறைவு செய்யவேண்டும் எனவும், சோலைவரி உள்ளிட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்கான கட்டணங்களை பொதுமக்கள் வீடுகளிலிருந்தே செலுத்துவதற்குரிய இணையமேம்பாடுகளையும் துரிதமாக மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்தக்கூட்டத்தில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை அழித்து மக்கள், ஊடகங்களை அடக்கி வருகிறது

## சாகர காரியவசம் தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை அழித்து மக்களையும் ஊடகங்களையும் அடக்கி வருகிறது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்டத்தின் ஆட்சி நிலவும் ஒரு நாட்டில், செயல்பாட்டு சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது. சட்டத்தின் ஆட்சி ஒழிக்கப்பட்டால், அந்த நாட்டு மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை இழப்பார்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களின் சுதந்திரத்தில் இது ஒரு அடிப்படைக் காரணி, கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை, ஒருவர் விரும்பியபடி வேலை செய்யும் உரிமை, ஒருவரின் மதத்தைப் பின்பற்றும் உரிமை போன்றவை ஜனநாயக சமூகத்தில் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன.

நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் பிரிவு ஆகிய மூன்று நிறுவனங்களும் இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்காகவே செயல்படுகின்றன. அரசாங்கத்தின் அரசியல் மேடையிலிருந்த இரண்டு ஓய்வுபெற்ற அதிகாரிகளை பொலிஸ் பிரிவு பொறுப்பான செயலாளராகவும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும் நியமித்து இலங்கை பொலிஸ் பிரிவு அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. இலங்கை பொலிஸ் பிரிவை கண்ணியம் இல்லாத இடமாக மாற்றியுள்ளனர்.

தேவையற்ற அரசியல் இடமாற்றங்கள் மூலம் அரசியல் செல்வாக்கால் சுயாதீன பொலிஸ் ஆணையம் பலவீனப்படுத்தப்படுகிறது. கடந்த காலங்களில் சட்டமா அதிபர் திணைக்களம் செல்வாக்கு செலுத்தப்பட்டது.

நீதித்துறையை நேரடியாகத் தாக்குவது சாத்தியமில்லை என்பதால், அரசியலில் பயன்படுத்தப்பட்ட நபர்களையே சமூக ஊடகங்கள் மூலம் பொதுமக்கள் மதிக்கும் நீதிபதிகளை அவதூறாகப் பேச மக்கள் பயன்படுத்துகிறார்கள். அந்தத் தாக்குதல்கள் காரணமாக சமீபத்தில் ஒரு நீதிபதி ஒரு வழக்கிலிருந்து விலகியுள்ளார் .

சட்டத்தின் ஆட்சி இல்லாத ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒருபோதும் வரமாட்டார்கள். நாட்டில் தற்போது நிலவும் மோசமான சூழ்நிலை மாறாவிட்டால் முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள்.

அரசாங்கத்தை அதிகமாக விமர்சிப்பவர் அடுத்து கைது செய்யப்படுவார் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தெளிவாகக் கூறினார். இந்த அச்சுறுத்தல் அவர்களின் அடக்குமுறையின் நேரடி விளைவாகும்.

இந்த வழியில் ஊடகங்களை அடக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் கடந்த காலங்களில் காணப்பட்டன. தொலைக்காட்சி நிறுவனங்கள் மற்றும் செய்தித்தாள்களை அச்சுறுத்துகின்றனர். ஒரு அரசாங்கம் செயல்பட முடியாத போது, அது அதன் விமர்சகர்களை மௌனமாக்கி மக்களின் வாக்குகளைப் பெற முயற்சிக்கிறது.

ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்பு பலர் கைதுசெய்யப்படுவார்கள் என்ற ஜனாதிபதியின் கூற்று அபத்தமானதா, மேலும் அவர் மக்களை ஒவ்வொருவராக சிறையில் அடைக்க முயற்சிக்கிறாரா? புத்தாண்டுக்குப் பிறகு அவரை சிறையில் அடைப்பதா இல்லையா என்பது கேள்வி அல்ல என்றும், அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போது அமைதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதி இது போன்ற அறிக்கையை வெளியிடுவது ஒருபோதும் பொருத்தமானதல்ல என்று கூறிய காரியவசம், சட்டத்தின்படி ஒருவரை கைதுசெய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக அரசியல் மேடையில் ஜனாதிபதியின் அறிக்கை மிகவும் மூன்றாம் தரச் செயல்.

தற்போதைய அரசாங்கம் மக்களை ஏமாற்றிவிட்டதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளதால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் பொய் சொல்லி மக்களை ஏமாற்றத் தயாராகி வருகிறார். நாட்டின் சில பகுதிகளில் கோயில் பிக்குகளுக்கு உணவு வழங்க முடியாத சூழ்நிலை உருவாகி வருகிறது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வர பிரிவினைவாதிகள் உதவினார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அரசாங்கம் பிரிவினைவாதிகள் விரும்பும் விதத்தில் செயல்படுகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும் இதே பொய்யால் மக்கள் ஏமாற்றப்படுவார்கள் என்று தான் நம்பவில்லை." என்றார்.

# சி.ஐ.டியில் டிரான் அலஸ் 5 மணிநேர வாக்குமூலம்



முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜென்ட் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்க டிரான் அலஸுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் அவர் வாக்குமூலம் வழங்கி வெளியேறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாரதப் பிரதமர் திரும்பும் வரை இந்த ஹெலிக்கொப்டர்களுடன் அதில் வரும் இந்திய படையினரும் இலங்கையில் தங்கி இருப்பர் எனவும் கூறப்பட்டது.

கொழும்புக்கு விமானத்தில் வந்து சேரும் பாரதப் பிரதமரை திருகோணமலை மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு அழைத்துச் செல்ல இந்த ஹெலிக்கொப்டர்களே பயன்படுத்தப்படும் எனத் தெரிகிறது.

கடைசியாக அநுராதபுரத்தில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பாரதப் பிரதமர் அங்கிருந்து ஹெலிக்கொப்டரிலேயே இராமேஸ்வரம் மண்டபம் பகுதிக்குப் புறப்பட்டுச் செல்வார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. இராமேஸ்வரத்தில் இடம்பெறும் பாம்பன்பாலத் திறப்பு விழா நிகழ்வில் பாரதப் பிரதமர் பங்கு பற்றவிருக்கின்றமையால் அவர் அநுராதபுரத்திலிருந்து நேரடியாக இராமேஸ்வரத்துக்கு ஹெலிக்கொப்டரில் செல்கின்றார் என்று கூறப்படுகின்றது.

ஆகையால்கொழும்பில்கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கும் பாரதப் பிரதமர் மோடிக்கு அநுராதபுரத்தில் வழியனுப்பு நிகழ்வு இடம்பெறும் எனக் கூறப்படுகிறது. இதனால் சர்வதேச புறப்பாடு ஒன்றுக்கான ஏற்பாடு அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

பாரதப்பிரதமர்கொழும்பிலிருந்துநிகழ்வுகளுக்காக திருகோணமலை மற்றும் அநுராதபுரத்திற்குச் செல்லும்போது அவருடன் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் சேர்ந்து பயணிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சட்டவிரோத சொத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு மீண்டும் நாட்டை ஆட்சி செய்ய வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் சொன்னார்.

திருடப்பட்டு குவிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்கும் சட்டத்தை வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவோம். சட்டவிரோதமாக வாங்கிய சொத்துக்களை பறிமுதல் செய்யும் சட்டத்தின் மூலம் யாரையும் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. எங்கள் தாய்நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் இறையாண்மையையும் மீண்டும் நிலைநாட்டுவதே எங்கள் எதிர்பார்ப்பு. - என்றார் அவர்.

அதேநேரம் 2026 வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவுகளைப் பெறுவது இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கும்.

இதற்கிடையில், பொருளாதார நெருக்கடி காரணமாக கைவிடப்பட்டிருந்த வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட பல திட்டங்கள் மீண்டும் தொடங்கப்படும்.

ஜப்பானிய அரசாங்கம் 11 திட்டங்களை கைவிட்டது. துஜஊயு வங்கியால் கடன் வழங்கப்பட்ட 11 திட்டங்கள் நிறுத்தப்பட்டன. ஜப்பானிய அரசாங்கம் மீண்டும் 11 திட்டங்களையும் தொடங்க ஒப்புக் கொண்டுளது.

பொருளாதாரம் நிலையாக உள்ளது. கடவத்தை-மீரிகம நெடுஞ்சாலைப் பகுதி சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து கடனைப் பெற்று கட்டப்பட்டது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

நாடு வங்குரோத்தானது. கடன் வழங்குவது நிறுத்தப்பட்டது. அந்த திட்டம் நிறுத்தப்பட்டது. 5,600 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக நாங்கள் மதிப்பிட்டுள்ளோம்.

சீன நிறுவனத்திற்கு ஒரு நாளைக்கு 21 மில்லியன் ரூபா வட்டி செலுத்த வேண்டும். சீன அரசாங்கத்துடன் மீண்டும் பேசிய பிறகு, எங்கள் பயணத்தின் போது, தடைப்பட்ட நெடுஞ்சாலை உட்பட, தடைப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்கவும், 76 புதிய திட்டங்களைத் தொடங்கவும் இணக்கம் ஏற்பட்டது " என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டி முறைமையையே தீர்வாக ஏற்போம், இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி தமிழ்த. தேசியப் பேரவையாக சைக்கிள் சின்னத்தில் வடக்கு,கிழக்கு எங்கும் போட்டியிடுகின்றோம்.

மேலும் மக்கள் மாயையுள் இருந்து எழுந்து உண்மையை புரிந்து விட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியும் அநுரவும் சுட்ட வடை இனி இங்கு பொரியாது,அவியாது. - என அவர் கூறியுள்ளார்.

## லாஃப்ஸ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை 420 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அதன் புதிய விலை 4,100 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோ கிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 168 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அதன் புதிய விலை 1,645 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக லாஃப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

## பெற்றோல் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் 10 ரூபாவால் குறைந்து ரூ. 299 ஆகவும், ஒக்டேன் 95 பெற்றோல் லீற்றர் 10 ரூபாவால் குறைந்து ரூ. 361 ஆகவும் விற்கப்படும்.

ஒட்டோ டீசல், சூப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் சிபெட்கோ அறிவித்துள்ளது.

சிபெட்கோ விலைக்குறைப்புக்கு அண்ணளவாக லங்கா ஐ.ஓ.சியும் எரிபொருள் விலையில் திருத்தம் செய்துள்ளது.

## புலம்பெயர் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதனை வழக்கமாகக் கொண்டுள்ளன. எவ்வாறிருப்பினும் பிரித்தானியா தடை விதிப்பது இதுவே முதன் முறையாகும். எவரேனும் ஒருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அவை நிரூபிக்கப்பட்டால் அன்றி, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமைக்காக மாத்திரம் தடை விதிப்பது பொறுத்தமற்றது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பட்டலந்த ஆணைக்குழுவில் ஆரம்பித்தது இன்று இந்த நிலைமையில் வந்து நிற்கின்றது.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பதாயின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே, வெளிநாடுகளின் இவ்வாறு செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால், வெளிவிவகார அமைச்சு இந்த விவகாரத்தில் அமைதியாகவுள்ளது.

இதே நிலைமை தொடர்ந்தால் இது நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். எனவே, இவ்வாறான விடயங்களில் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் தீர்மானங்களை எடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம். யுத்தத்தின்போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும்.

ஆனால், அது குறித்த விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு அந்தச் செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது. இது தொடர்பில் நான் நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியிருக்கின்றேன்.

இங்கு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை மூடிவிட்டு, ஜெனிவாவுக்குச் சென்று அமைச்சர் விஜித ஹேரத் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடுகின்றார்.

தடை விதிக்கப்பட்டுள்ளவர்கள் மீது ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டால் பிரித்தானியா அவற்றை இலங்கைக்கு அறிவிக்கலாம். அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

பட்டலந்த மாத்திரமின்றி நாட்டில் 46 வதை முகாம்கள் காணப்பட்டன. எனவே, இவற்றைத் தவிர்த்து பட்டலந்த குறித்து மாத்திரம் பேச முடியாது. ரணில் விக்கிரமசிங்கவை முடக்குவதற்காகவே பட்டலந்த தொடர்பில் மாத்திரம் பேசப்படுகின்றது." என்றார்.

# மியன்மாருக்கு நிவாரணம் வழங்க அரசாங்கத்திடம் ரணில் கோரிக்கை



மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இராணுவம் உட்பட மருத்துவக் குழுவை மியன்மாருக்கு அனுப்புமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, மியன்மாருக்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதாகவும், அந்த நாட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்க மருந்துகள் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்களை அனுப்புமாறு அரசாங்கத்திற்கு முன்மொழிவதாகவும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிடுகையில்,

2015 ஆம் ஆண்டு நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்ட போது, நாங்கள் இராணுவக் குழுவை அனுப்பினோம். இந்தியாவிற்குப் பிறகு இலங்கை இரண்டாவது பெரிய நன்கொடையாளராக இருந்தது.

இன்று, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, சீனா மற்றும் அவுஸ்திரேலியா கூட மியான்மருக்கு உதவ உதவிகளை அனுப்பியுள்ளன அதனால் நாமும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவ மருத்துவப் படையைச் சேர்ந்த மருத்துவர்கள் உட்பட ஒரு குழுவை உடனடியாக மியன்மாருக்கு அனுப்பி, அவர்களுக்கு உபகரணங்களை வழங்கி, மியன்மாரில் ஒரு தற்காலிக மருத்துவமனையை அமைக்க வேண்டும் என்பதே எனது முன்மொழிவு என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.கவின் முன்னாள் அமைச்சரின் செயலாளர் எனக் கூறியவர் கைது

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவரின் செயலாளர் எனக் கூறிக் கொண்ட ஒருவர் ஓட்டிச் சென்ற சொகுசு காரில் இருந்து 9 மில்லிமீற்றர் துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என முல்லேரியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கியை வைத்திருந்தமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அங்கொட குடா புத்கமுவ பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தல் 302 முறைப்பாடுகள் பதிவு




உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், 20 ஆம் திகதியிருந்து 30ஆம் திகதி வரை 302 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 68 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், இதுவரை தேர்தல் குறித்த வன்முறை சம்பவங்கள் 02 பதிவாகியுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப் பெற்றுள்ளன.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 220 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 82 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நிலநடுக்க ஆபத்து!

கடந்த வெள்ளிக்கிழமை 7.7 ரிச்டர் அளவில் மியான்மரைத் தாக்கிய பேரழிவு நிலநடுக்கம் வங்கதேசம், இந்தியா, லாவோஸ், தாய்லாந்து மற்றும் சீனா உள்ளிட்ட புறசுற்றுப் பகுதிகளில் உள்ள பல நாடுகளையும் கூடப் பாதித்தது. நேற்று பிற்பகல் நிலைவரப்படி, சுமார் 1,700 பேர் இறந்தனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதுபோன்ற பேரிடரை எதிர்கொள்ள நமது நாடு தயார் நிலையில் இருக்கின்றதா என்பது குறித்து பல இலங்கையர்கள் இப்போது கேள்வி எழுப்புகின்றனர்.

இலங்கைத் தீவு அமைந்துள்ள புவியியல் பிரதேசம் பாரம்பரியமாக நிலநடுக்க பாதிப்புக்குள்ளான பகுதியாக அறியப்படாவிட்டாலும், சமீப காலங்களில் எதிர்பாராத விதமாக இலங்கையில் நில அதிர்வு நடவடிக்கைகள் அதிகரித்திருக்கின்றமை அறியப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், தொடர்ச்சியான சிறிய நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. பேரிடர் மேலாண்மைக்கான ஆசிய பசிபிக் கூட்டமைப்பின் தகவலின் பிரகாரம், 2020ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 16 தடவைகளும், 2021 ஆம் ஆண்டில் 18 தடவைகளும் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இருப்பினும், பதிவு செய்யப்பட்ட சிறிய நிலநடுக்கங்களின் எண்ணிக்கை 2022 இல் ஐந்து ஆகக் குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், ஒன்பது சிறிய நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இப்படிப் பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான நிலநடுக்கங்கள் ரிச்டர் அளவுகோலில் 3 க்கும் குறைவாகப் பதிவாகியுள்ளமையால், இந்த நிலநடுக்கங்கள் கட்டடங்களைக் கணிசமாக பாதிக்கும் வாய்ப்பு மிகக் குறைவு என்று இலங்கையின் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இப்பிராந்தியத்தில் நிலநடுக்க நிகழ்வுகளில் ஏற்பட்ட இந்த அசாதாரண எழுச்சி வீச்சு நிபுணர் சமூகம் மற்றும் உள்ளூர் மக்கள் இரு தரப்பினரிடமும் கவனத்தை ஈர்த்து கவலைகளை எழுப்பியுள்ளது.

இலங்கையில் அத்தகைய கடுமையான தாக்கத்திற்கான சாத்தியக்கூறு குறைவாக இருப்பதாகவும், கவலைக்கு எந்த காரணமும் இல்லை என்றும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியக நிபுணர்க வலியுறுத்துகின்றனர். இருப்பினும், திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத உயர் அடர்த்தி நகரமயமாக்கல் மற்றும் கொழும்பு மற்றும் மேற்கு கடற்கரையைச் சுற்றி காளான்கள் போல வளர்ந்து வரும் கட்டடங்களின், குறிப்பாக உயரமான கட்டடங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானத் தரம் குறித்து அவர்கள் கவலை தெரிவித்தனர்.

“இலங்கைச் சூழலில், பெரும்பாலான உயரமான கட்டடங்கள் பாதுகாப்பாக இருக்கலாம், ஆனால் மோசமாக கட்டப்பட்ட கட்டடங்களின் விஷயத்தில், சில தாக்கங்கள் ஏற்படலாம்” என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் நிபுணர் ஒருவர் கூறுகின்றார். கட்டடங்கள் கட்டமைப்பு ரீதியாக நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காக ஒரு தேசிய கட்டடக் குறியீட்டை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் மக்கள்தொகை மையம் கொழும்பு மற்றும் கம்பஹாவிலும் மேற்கு கடற்கரையிலும் இருப்பதால், நடுத்தர அளவிலான மற்றும்பெரிய நிலநடுக்கத்தின் சாத்தியமான தாக்கத்தை வரைபடமாக்க உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களுடன் அரசாங்கம் ஓர் ஆபத்து மதிப்பீட்டை முன்னெடுப்பது புத்திசாலித்தனமாக இருக்கும். நெருக்கடி ஏற்படும் வரை காத்திருக்காமல் முற்கூட்டியே செயல்படுவது உசிதமானது.







# அனலைதீவு மருத்துவ அதிகாரியை பாராட்டினார் வடக்கு மாகாண ஆளுநர்

"வடமராட்சியில் கடமையாற்றும் அரசாங்க அலுவலர் ஒருவரை புத்தூருக்கு இடமாற்றம் செய்தாலே, அந்த இடமாற்றத்தை ஏற்கமறுக்கின்ற நிலையில், கண்டியிலிருந்து அனலைதீவுக்கு வந்து தங்கியிருந்து சேவையாற்றி இந்தவூர் மக்கள் மத்தியில் இடம்பிடித்துள்ள மருத்துவ அதிகாரி நுவனி உண்மையில் பாராட்டுக்குரியவர்தான்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அனலைதீவு பிரதேச மருத்துவமனையில், மத்திய சுகாதார அமைச்சின் 6.3 மில்லியன் ரூபா நிதியில், கடற்படையின் பங்களிப்புடன் மறுசீரமைக்கப்பட்ட மருத்துவர் விடுதி திறப்பு விழாவும், விரிவுபடுத்தப்பட்ட சுகாதாரசேவை அறிமுக நிகழ்வும் அனலைதீவு பிரதேச மருத்துவமனை வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மருத்துவர் விடுதியை திறந்து வைத்த ஆளுநர், மருத்துவமனை வளாகத்தை பார்வையிட்டு தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார். இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து அனலைதீவு பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் பல கோரிக்கைகள் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன. அனலைதீவுக்கான நோயாளர்காவுவண்டி படகுச்சேவை, அனலைதீவுப் பிரதேசத்தினுள் செயற்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து அடிக்கடி பழுதடைகின்றமையால் புதிய பாஸ், அனலைதீவு இறங்குதுறை புனரமைப்பு, அனலைதீவினுள் காணப்படும் வீதிகளின் புனரமைப்பு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அத்துடன் பிரதேச மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிக்கு ஊர் மக்கள் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவித்திருந்தனர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில்,

"நெடுந்தீவு பிரதேசத்துக்கு இந்த மாதம் ஆரம்பத்தில் நாம் நடமாடும் சேவைக்குச் சென்றிருந்தோம். தீவகப் பிரதேசங்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. நாம் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து வருகின்றோம்.

நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தின் தீவகத்தின் 4 இறங்குதுறைகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தேன். நெடுந்தீவு இறங்குதுறை பகுதியளவிலும், நயினாதீவு மற்றும் எழுவைதீவு இறங்குதுறைகள் முழுமையாகவும் புனரமைக்கப்பட்டிருந்தன. அனலைதீவு இறங்குதுறையை புனரமைக்க திட்டமிட்டிருந்தாலும் துரதிஷ்டவசமாக அப்போது அது நடைபெறவில்லை. அனலைதீவு இறங்குதுறையை எமது முன்னுரிமைப்பட்டியலில் சேர்த்துள்ளோம். விரைவில் அதனைப் புனரமைத்து தருவோம்.

இந்த அரசாங்கம் உள்ளூர் வீதிகளை புனரமைப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்துகின்றது. வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் 1,500 கிலோ மீற்றர் நீளமான வீதிகளை அரசாங்கம் புனரமைக்கவுள்ளது. அதற்காக இந்த ஆண்டு 5,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் தேவையின் முன்னுரிமை அடிப்படையில் அதனைச் செய்யவுள்ளோம்.

பஸ் பிரச்சினை தொடர்பில் நாம் அறிவோம். இந்தக் கூட்டத்தில் நீங்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்னராகவே, அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு வழங்கவுள்ள புதிய பஸ்களை நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளுக்கு வழங்க வேண்டும் என கேட்டுள்ளோம்.

உங்கள் பிரதேச மருத்துவமனையின் மருத்துவ

தொடர்ச்சி▼












# அனலைதீவு மருத்துவ அதிகாரியை பாராட்டினார் வடக்கு மாகாண ஆளுநர்

தொடர்ச்சி▲

அதிகாரியின் சேவை அர்ப்பணிப்பானது. அவர் தனது வரவேற்புரையில் கூட, இந்தப் பிரதேச மக்களை தனது பெற்றோராக, சகோதரராக கருதுகின்றார் என்பதைச் சொன்னார். அவருக்கு உங்களின் அன்பு பிடித்திருக்கின்றது. அவர் இங்கு வந்து தமிழ் மொழியில் உரையாடுகின்றார். உண்மையில் அவரது சேவையை நாங்கள் மெச்சுகின்றோம். கடற்படைத்தளபதி கூட தனது உரையில், இவரைப் போல 5 மருத்துவர்கள் இருந்தால் தீவகத்தின் மருத்துவப் பிரச்சினை தீர்ந்து விடும் என்று குறிப்பிட்டதையும் நினைவுகூர்கின்றேன்.

கடற்படையினர் இந்தக் கட்டடத்தை புனரமைத்தமைக்கு நன்றிகூறுகின்றேன். தீவகப் பகுதிகளின் இறங்குதுறைகளின் புனரமைக்காக இருக்கலாம், அரசாங்க கட்டடங்களின் புனரமைப்பாக இருக்கலாம் பெரும்பாலும் எங்ளுக்கு கடற்படையினர் உதவுகின்றனர். அதேபோன்று இடர்நேரத்திலும் அவர்கள்தான் எமது மக்களுக்கு கைகொடுக்கின்றனர்.

உங்கள் பிரதேசத்துக்கான நோயாளர்காவு வண்டி படகுச்சேவை இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைக்கும் என நம்புகின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் பிரதேசம் தொடர்பான சில கவலைகள் எனக்கிருக்கின்றன. உங்கள் பிரதேசத்தின் பிரதேச செயலர் கூட தனது உரையில் அதைச் சொல்லியிருந்தார். நீங்கள் ஒற்றுமையாக ஒரே கோட்டில் இல்லை.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அம்மா ஒருவர் என்னை வந்து சந்தித்தார். தான் சிறு வயது முதல் வழிபட்ட ஆலயம் பூட்டப்பட்டிருக்கின்றது என்று சொல்லி அழுதார். உங்களின் முரண்பாடுகளால் ஆலயங்கள் மூடப்பட்டிருக்கின்றமை வேதனையாக இருக்கின்றது. இது சிறிய தீவு. இங்குள்ள நீங்கள் உங்களுக்குள் ஒருவருக்கொருவர் சமரம் செய்து கொள்ளவேண்டும். ஒற்றுமையாக இருப்பதுதான் பலம். ஒற்றுமையாக இருந்து கோயில்களை மீளவும் திறவுங்கள். இந்த மக்களுக்கு சமூசசேவைகளை ஒன்றாகச் செய்யுங்கள். நீங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் எங்களுக்கும் இந்தப் பிரதேசத்துக்கு அபிவிருத்தி செய்வதற்கு மனவிருப்பம் இருக்கும். எதிர்காலத்தில் நீங்கள் ஒற்றுமையாக – ஓரணியாக இருக்கவேண்டும்." என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் கருணாதுங்க, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சுசீந்திரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஈ.தயாரூபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேர்தல் பிரசாரம் நேற்று ஸ்தாபகத் தலைவர் வீ.கே.வெள்ளையனின் ஊரில் ஆரம்பம்

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

2025ம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நோர்வூட் பிரதேச சபைக்காக போட்டியிட உள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் வேட்பாளர்கள் நேற்றுத் திங்கள்கிழமை தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் வீ.கே.வெள்ளையநின் சொந்த ஊரான பொகவந்தலாவ முத்துலெட்சுமி தோட்டத்தில் தமது முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டத்தை ஆரம்பித்தனர்.

அங்கு சென்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் வேட்பாளர்கள் அங்குள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூஜைகளில் கலந்து கொண்ட பின்னர் தமது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் இளைஞர் அணியின் தலைவர் பா.சிவநேசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சங்கத்தின் பிரதி பொதுச் செயலாளர் பழனிவேல் கல்யாணகுமார் மற்றும் வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி விடயங்களைக் கூட இந்த அரசு இராணுவமயப்படுத்துகின்ற மோசமான நிலை!

### முன்னாள் தவிசாளர் நிரோஷ் ஆட்சேபம்




அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நிர்வாக ஒழுங்குகளுக்குள்ளாக கடமைகளை திணைக்களங்களுக்கு அறிவுறுத்தி, அவற்றின் வாயிலாக மக்களுக்கான சேவையைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, இராணுவத்தைப் பயன்படுத்தி சாதாரண சிவில் நிர்வாகத்தைச் செயல்திறன் குன்றியதாக மாற்றக்கூடாது. இராணுவமயமாக்கத்தை ஊக்குவிக்க கூடாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தெள நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தலைமையில், இராணுவ குழுக்கள் இணைந்து துய்மிப்புப் பணியில் ஈடுபட்டமை குறித்து தனது அதிருப்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மக்களையோ அல்லது கட்சித் தொண்டர்களையோ ஈடுபடுத்தி யாழ் மத்திய பஸ் நிலையத்தை தூய்மைப்படுத்தியிருந்தால் நாம் அதனை வரவேற்றிருப்போம். மாறாக அரச அதிகாரத்தின் வாயிலாக, இராணுவத்தினரை பெருமளவில் அழைத்து வந்து யாழ் மாநகர சபை ஆற்ற வேண்டிய தூய்மிப்புப் பணியை அரச எம்.பி. இளங்குமரன் மேற்கொண்டுள்ளார்.

தங்களிடத்தில் யாழ். மத்திய பஸ் நிலையத்தைத் துப்புரவு செய்ய வேண்டிய நன்நோக்குக் காணப்படுமாயின் தங்கள் கட்சி ஆட்சியில் உள்ள அரசாங்கம் என்பதன் அடிப்படையில் சாதாரணமாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் சிவில் நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டிருக்க முடியும். யாழ் மாநகர சபையில் ஆளணி வளம் உள்ளது. யாழ் மாநகர சபை நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லையானால் ஆளுநர், மாகாண உள்ளூராட்சி திணைக்கள விடயங்களுக்கு அதிகாரம் பொருந்தியவராகவுள்ளார்.

அவர் ஊடாக ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கலாம். இவற்றுக்கு மேலதிகமாக பொதுமக்களைத் திரட்டி அல்லது கட்சித் தொண்டர்கள் ஊடாக சிரமதானத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாது பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரைப் பயன்படுத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளீர்கள். இராணுவத்தினரை சிவில் நிர்வாகம் ஊடக மேற்கொள்ள வேண்டிய பணிகளில் தவிருங்கள். கடந்த கேட்டாபய காலத்திலும் இராணுவத்தை உள்ளூராட்சி விடயப்பரப்புகளுக்குள் நுழைப்பதற்கு பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நான் உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் தலைவர் என்ற வகையில் அவற்றை முற்றாக நிராகரித்திருந்தேன்.

நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களே இராணுத்தின் தயவில் இயங்கினால், தங்கள் கட்சி சார்ந்த – எதிர்காலத்தில் தெரிவாகக் கூடிய – உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சபைகளில் சிறிய வேலைகளைச் செய்வதற்கும் இராணுத்தினையே அழைக்க எத்தனிப்பர். எனவே இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு ஆடள்பட்டிருக்கும் எமது இனத்திற்கு இன்றுவரையில் தங்கள் கட்சி ஆரோக்கியமான பொறுப்புக்கூறலையோ தீர்வை முன்வைப்பதற்கோ முன்வரவில்லை. இவ்வாறிருக்க சாதாரண விடயங்களிலும் இராணுவ பிரசன்னத்தையும் இராணுவமயமாக்கத்தையும் மேற்கொள்வது எமது மக்களை மேலும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் செயற்பாடாகும். – என வலி கிழக்கின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.





# கிராம உத்தியோகத்தரின் முன் முயற்சியினால் தடுக்கப்பட்ட சட்டவிரோதமான நில அபகரிப்பு

## காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் சம்பவம்

(வி.ரி.சகாதேவராஜா)

கிராம உத்தியோகத்தர் ஒருவரின் முயற்சியால் சட்டவிரோதமான நில அபகரிப்பு ஒன்று தடுக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் காரைதீவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் வடிகானில் சட்டவிரோதமாக நிரப்பப்பட்ட கிறவல் மண் அகற்றப்படும் வேளை காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.எஸ். ஜகத் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அ.சுந்தரகுமார் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் சமுகமளித்திருந்தனர்.

அது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் உள்ள சதுப்பு நில வயல் காணிகள் அனுமதியற்ற வகையில் மூடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் காரைதீவு 01 குடியிருப்பு பகுதியில் இருந்து வெள்ள நீர் வடிந்து ஓடுவதற்காக அமைக்கப்பட்ட வடிகால் இனந்தெரியாத நபர்களினால் கிரவல் மண்ணிட்டு கடந்த 23 ஆம் திகதி மூடப்பட்டது.

இது தொடர்பாக அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர் செ.கஜேந்திரன் பிரதேச செயலாளருக்கு அறிக்கையிட்டமையைத் தொடர்ந்து பொலிஸ் முறைப்பாட்டினையும் மேற்கொண்டு இருந்தார்.

இந்நிலையில் அந்தக் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளரின் அனுமதியோடு காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதேச சபை செயலாளர் மற்றும் பிரதேச தன்னார்வ தொண்டர்களோடு இணைந்து நேற்று முன்தினம் அந்த வடிகானில் உள்ள நிரப்பப்பட்ட கிறவல் மண் முற்றாக அகற்றப்பட்டது.

கிராம உத்தியோகத்தரின் நடவடிக்கையை பலரும் பாராட்டினர்.











# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஞாயிறு நடந்த பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப்பேருரை

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வித்தியா பதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத்தின் தலைவர் பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில், வித்தியாபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் மூன்றாவது ஆண்டு நினைவுப்பேருரை நடைபெற்றது.

நிகழ்வில் திருமதி. சாந்தா சந்திரசேகரம் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதையும், கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறை முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். அன்டனி நோர்பேட் "பூகோளம் வெப்பமடைதல் :சமகாலப் பிரச்சனைகள் பற்றிய நோக்கு" என்னும் தலைப்பில் உரையாற்றுகின்றமையையும், அவருக்கான கௌரவத்தை ஞாபகார்த்த மன்ற குழுவின் வழங்கியபின் பிடிக்கப்பட்ட படத்தினையும் கலந்துகொண்டோரையும் காணலாம்.









# உடப்பு செல்வபுரம் பகுதியில் நேற்று கரைவலையில் சிக்கிய பாரை மீன்கள்





(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் – உடப்பு செல்வபுரம் பகுதியிலுள்ள கருணானந்தன் என்ற கரைவலைத் தொழிலதிபருக்குச் சொந்தமான வலையில் நேற்று சிறிய ரக, சுமார் ஒரு கிலோ தொடக்கம் இரண்டு கிலோ வரையான பாரை மீன்கள் பிடிபட்டு கரை சேர்க்கப்பட்டன.

பெருந்தொகையான மீன்கள் தமது வலையில் வந்த போதும் அவை வலையை விட்டு துரதிஷ்ட வசமாகத் தப்பிச் சென்று விட்டன எனவும் மீனவர்கள் கவலையுடன் கூறினர். இதன் போது சுமார் 200மீன்கள் மட்டுமே கரை சேர்க்கப்பட்டு விற்பனைக்காக உடப்புக்கு கொண்டு செல்லப்பட்டன.

# நாயாறு கடலில் மூழ்கிய மற்றொரு யுவதியும் பலி



(பா.சதீசன்)

நாயாறு கடலில் உயிரிழந்த யுவதியின் சடலம் நேற்றே மீட்கப்பட்டமையை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் உத்தரவிட்டார்.

இதேவேளை இச்சம்பவத்தில் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மற்றொரு யுவதியும் உயிரிழந்தார்.

கடலில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட யுவதியின் சடலத்தை முல்லைத்தீவு நீதிவான் நேற்று மாலை நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். அதனையடுத்து சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து சென்று சடலத்தை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க அவர் உத்தரவிட்டிருந்தார்.

உடையார்கட்டு பகுதியில் தையல் கற்கும் யுவதிகளும், தையல் பயிற்சியாளர்களுமாக 15 பெண்கள் கப்ரக வாகனத்தில் நாயாற்று கடற்பகுதிக்கு வந்துள்ளனர். அந்தப் பெண்கள் நாயாற்றுக்கடலில் குளித்து கொண்டிருந்த போது திடீரென மூன்று பெண்கள் நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளனர்.

நீரில் அடித்துச்செல்லப்பட்ட மூவரில் இரு பெண்கள் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மற்றைய யுவதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மற்றுமொரு யுவதியும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வள்ளிபுனம் பகுதியை சேர்ந்த சிவபாலராஜா பிரியந்தினி, உடையார்கட்டு இருட்டுமடு கிராமத்தை சேர்ந்த சிவகுமார் விதுஷிகா ஆகிய 20 வயதுடைய இரு யுவதிகளே உயிரிழந்துள்ளனர். மற்றைய இன்னுமொரு பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கி, ரவைகளுடன் ஒருவர் சம்மாந்துறைப் பொலிஸாரால் நேற்றுக் கைது!



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அனுமதிப்பத்திரம் இல்லாத “பொர தொளகாய் ஷொட் கன்” வகையைச் சேர்ந்த துப்பாக்கியுடனும், T56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியின் 10 ரவைகளுடனும் ஒருவர் சம்மாந்துறை பொலிஸ் பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இக்கைது இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மலையடிக்கிராமம் 04 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் சான்றுப்பொருள்களுடன் சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் ஓய்வு பெற்ற முன்னால் சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ‘ஏப்ரல் முட்டாள்கள் தினம்’ ஏமாந்து விடாதீர்கள் இன்று



நடராஜன் ஹரன்

எல்லோருக்கும் மிகப் பிடித்தமான தினம் இன்று. நம்மை நாமே கொண்டாடிக் கொள்ளும் தினம். முட்டாள்கள், முட்டாள்களை முட்டாள்கள் ஆக்கி மகிழும் தினம். இப்போது புரிந்திருக்குமே? ‘யுடட குழழடள னுயல’ என்று அழைக்கப்படும் ஏப்ரல் முதலாம் திகதியைப் பற்றித்தான் இந்தக் கட்டுரை.

எல்லோருமே ஜாலியாக சிரித்துக் கொண்டு, ஒருவரையொருவர் சீண்டிகொண்டு நாம் முட்டாள்கள்தான் என்பதை ஒப்புக்கொள்ளவே இந்தத் தினம். இதை யாருமே தவறாக புரிந்து கொள்ளுவதோ அல்லது அடுத்தவர் நம்மை முட்டாளாக்கியவுடன் ‘விட்டேனா பார்’ என்று ஆத்திரமடைவதோ கூடாது.

அதேபோல முட்டாள் ஆக்க விரும்புவோர் அடுத்தவரது மனம் புண்படாமல் அதே சமயம் ‘ஓ! இந்தச் சின்ன விஷயத்தில் ஏமாந்து விட்டோமே!“ என்று அவர் வாய்விட்டுச் சிரிக்கும் படியாக விளையாட வேண்டும். விளையாட்டு மட்டும்தான் குறிக்கோளாக இருக்கவேண்டும். எல்லை மீறாமல் இருந்தால் தொல்லைகள் இல்லை, அல்லவா?

சரி இந்த முட்டாள்கள் தினம் எப்படி வழக்கத்தில் வந்தது?

ஐரோப்பியர்கள் பல நூற்றாண்டுகளாக ஜூலியன் நாள்காட்டியைத்தான் பயன்படுத்தி வந்தனர். 18 ஆம் நூற்றாண்டின் நடுவில் கிரிகோரியன் நாள்காட்டி புழக்கத்தில் வந்தது. பழைய நாள்காட்டியின்படி ஏப்ரல் மாதத்தில் தான் புது வருடம் ஆரம்பம். ஆனால் புதிய நாள்காட்டியில் ஜனவரியிலிருந்து புது வருடம் கணக்கிடப்பட்டது. இந்த மாற்றம் பல குழப்பங்களை உண்டு பண்ணியது. யாரெல்லாம் பழைய பஞ்சாங்கமாக இருந்தார்களோ அவர்கள் ‘முட்டாள்கள்’ என்று முத்திரை குத்தப் பட்டார்கள். காலப்போக்கில் இந்த தினம் மற்றவர்களை விளையாட்டாக, வேடிக்கையாக முட்டாள் ஆக்கும் தினமாக மாறி இன்றுவரை நிலைத்துவிட்டது.

இன்னொரு கதையும் வழக்கில் இருக்கிறது. ரோமானிய அரசன் கான்ஸ்டன்டைன் என்பவனது ஆட்சி பலத்த சர்ச்சைக்கு உள்ளான போது, அவன் தனது அரசவைக் கோமாளி கூகல் என்பவனையும், தனது பழங்குடியினரையும் ஒரு நாள் நாட்டை ஆளச் சொன்னானாம். கோமாளிகள் உண்மையில் மிகுந்த புத்திசாலிகள். வாக்குச் சாமர்த்தியத்துடன் கூடிய வேடிக்கை பேச்சுக்கள் பேசுவதில் சமர்த்தர்கள். ஆனாலும் அவர்களை அந்தக் காலத்தில் முட்டாள்கள் என்று அழைப்பது வழக்கமாக இருந்தது. கோமாளிகள் ஆட்சி செய்த அந்த ஒருநாள் தான் யுடட குழழடள னுயல. அப்போதிலிருந்து இந்த ஏப்ரல் முதலாம் திகதி ‘முட்டாள்கள்’ தினமாக உலகெங்கிலும் மிகப் பெரிய உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

ஏப்ரல் 1 – ஏமாற்றுவதையும் ஏமாறுவதையும் சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொள்ளும் ஒரு தினம்.

தொடர்ச்சி ▼

# ‘ஏப்ரல் முட்டாள்கள் தினம்’ ஏமாந்து விடாதீர்கள் இன்று

தொடர்ச்சி ▲

சுருக்கமாகச் சொன்னால் முட்டாள்கள் தினம்.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தை பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இன்றைய தினம், எப்படி உருவானது?

அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. அவற்றுள் ஒன்றுதான் இது.

1500களில் ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த ஒரு பழக்கமாக ஏப்ரல் 1 கூறப்படுகிறது.

காலப்போக்கில் மனிதர்களை ஏமாற்றும் தினமாக அது மாற்றம் கண்டதாம்.

இது போன்று பல கதைகள் பரவிவருகின்றன.

சர்வதேச ரீதியில் அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், மகளிர் தினம், தொழிலாளர்கள் தினம் என்று மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கும் என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதைப் போல இத்தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாகச் சொல்லிக் கொள்ள எவரும் முன்வருவதில்லை.

அதே நேரம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் முட்டாள்களான “அறிவாளிகளின் தினம்“ என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. அதுதான் இந்த ஏப்ரல் முதல் திகதியாகும். விஷயங்களை அறிந்து கொள்பவன் அறிஞன் ஆகின்றான் என்பார்கள். அதேபோல் ஒரு முட்டாள் எனப்படுகிறவன் “தான் ஒரு முட்டாள்“ என்பதை அறிந்து கொள்ளும் போது அவனும் ஒரு “அறிஞனாக“ வாய்ப்புக் கிட்டுகிறதா என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

“கற்றாரைக் கற்றாரே காமுறுவது“ போல் ஒரு முட்டாள் அவனை விடப் பெரிய முட்டாளை மெச்சுவான் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார் என அறிகிறோம். “முட்டாள்கள் தினம்“ ஏப்ரல் முதலாம் திகதி உலகமெல்லாம் முட்டாள்களாக்கும் முயற்சி நடைபெறுகிற ஒரு முட்டாள் நாள். இது எவ்வாறு ஆரம்பமானது என்ற வினாவும் எம்முள் எழுகின்றது.

புராதன வரலாற்றில் ரோமானிய நாம் காட்டியின்படி ஏப்ரல் முதலாம் திகதிதான் வசந்தம் ஆரம்பிக்கும் பொன்னாளாகும். புராதன வரலாற்றில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடியதற்கான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஹார்வி என்னும் வரலாற்றாய்வாளர் தனது குறிப்பில், பிரான்ஸ் தேசத்தின் அரசன் ஒன்பதாம் சார்ள்ஸ் காலத்தில் மார்ச் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர் எனக் குறிப்பிடுகிறார். திருவிழாவைப்போல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களின்போது ஒருவருக்கொருவர் பரிசுப் பொருள்களையும், அன்பளிப்புகளையும் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார். இந்த ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஏப்ரல் முதலாம் திகதி பெருவிருந்துடன் புத்தாண்டு விழா நிறைவெய்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1562ம் ஆண்டளவில் அப்போதைய போப்பாண்டவரான 13 ஆவது கிரகரி அவர்கள் பழைய ஜுலியன் ஆண்டுக் கணிப்பு முறையை ஒதுக்கி புதிய கிரேகோரியன் ஆண்டுக் கணிப்பு முறையை நடைமுறைப்படுத்தினார். இதன்படி ஜனவரி 1 அன்றுதான் புத்தாண்டு ஆரம்பமாகின்றது. 1562ஆம் ஆண்டில் போப் கிரகோரி புதிய ஆண்டுத் தொடக்கத்தை நடைமுறைப்படுத்தும்படி அறிவித்தார். ஆண்டுத் தொடக்க நாளாக ஜனவரி முதலாம் திகதியை அறிமுகம் செய்து வைத்தார்.

இனிமேல் பிரான்ஸ் தேசம் முழுமையும் இந்த நாள்காட்டிதான் என்று ஊர் தோறும் அறிவிக்கப்பட்டது. இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது போப்பின் அறிவிப்பை நம்பாதவர்கள் ஏப்ரல் முதலாம் திகதியையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடினர். இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பிய தேசங்களும், அவற்றின் மக்களும் உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குச்

தொடர்ச்சி ▼



# ‘ஏப்ரல் முட்டாள்கள் தினம்’ ஏமாந்து விடாதீர்கள் இன்று

தொடர்ச்சி ▲

சில காலம் எடுத்தது. அதற்குக் காரணங்கள் பல உண்டு.

அன்றைய காலகட்டத்தில் இது போன்ற செய்திகள் அல்லது மாற்றங்கள் சகலரையும் சென்றடைவதற்குரிய தகுந்த சாதனங்கள் இருக்கவில்லை. அத்தோடு பழைய வழக்கத் தைப் புறம் தள்ளி புதிய வழக்கத்தை ஏற்றுக் கொள்வதையும் இம்மக்கள் மறுத்திருக்கலாம்.

ஆகவே இம்மக்கள் தொடர்ந்தும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியையே தமது புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி வந்தார்கள். எவ்வாறா யினும் பிரான்ஸ் 1852 ம் ஆண்டிலும், ஸ்கொட் லாந்து 1660 ஆம் ஆண்டிலும், ஜெர்மனி, டென்மார்க்,நோர்வே போன்ற நாடுகள் 1700ஆம் ஆண்டிலும், இங்கிலாந்து 1752ஆம் ஆண்டிலும் இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை உத்தி யோகபூர்வமாக ஏற்றுக் கொண்டன.

புதிய வழக்கத்தை ஏற்றுக் கொண்டு ஜன வரி முதலாம் திகதியை புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள் இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்ரல் மாதம் முதல் திகதி யில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்ரல் முட்டாள்கள் என்று அழைத்தார்கள். இதிலிருந்து ஏப்ரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

என்றாலும் 1582 ம் ஆண்டுக்கு முன்ன ரேயே 1508 ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத் தில் முட்டாள்கள் தினம் கொண்டாடப்பட்டு வந்துள்ளது என்பதற்கு சான்றுகள் உண்டு. அதேபோல் டச்சு மொழியிலும் 1539ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் முட்டாள்கள் தினம் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை அறியக் கூடிய தாக உள்ளது.

1466ஆம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது. ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் அதிகாரத்திற்கு வந்த போது, நடைமுறைகளை மாற்றினார்கள். தற்போதுள்ள ஈஸ்டர் பண்டிகையினையும் மாற்றி அறிவித்தார்கள். பழமையான கொண் டாட்டங்களை மாற்றியதோடு அவற்றில் ஒரு சிலவற்றை வேடிக்கை, வினோத கொண் டாட்டங்களுக்குரிய நாளாக மாற்றினர்.

இந்த மாற்றங்களில் நம்பிக்கை இல்லா மலிருந்த இவர்களை கேலியும் கிண்டலும் செய்து விளையாட்டாக முட்டாளாக்கி ஏமாற்றும் போக்கில் ஈடுபட்டனர். இதுவே நாம் இன் றைக்கு வேடிக்கையாய் முட்டாள்களாக்கி மகிழ்கிற நாளாக தொடர்கிறது எனலாம். ஜனவரி மாதம் முதலாம் திகதியை புத்தாண்டாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் அல்லது மறந்தவர் களுக்கு முட்டாள்தனமான பரிசுகளை அனுப் பினர். பெரிய பரிசுக் கூடைகள் போன்று வடிவமைத்து உள்ளே குதிரை முடி, பழைய குப்பை என்று நிரப்பிக் கொடுத்து ஏமாற்று தல் போன்ற ஏமாற்று வேலைகளைச் செய்து ஏமாற வைத்தனர். இதை நம்பும்படியான ஆனால் நகைக்கும்படியான செயலாக செய்து மகிழ்ந்தனர்.

நெப்போலியன் ¹1 ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி லூயிசை 1810இல் திருமணம் செய்து கொண்டார். அந்த மாதம், நாள் ஏப்ரல் 1 என்ப தால் மணமகளை கேலி செய்து இருக்கின்றனர். “நெப்போலியன் உண்மையாகத் திருமணம் செய்யவில்லை. உன்னை முட்டாளாக்கவே திருமணம் செய்திருக்கிறார்“ என்று எள்ளி நகையாடினர் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய கேலிக்கூத்துக்கள் சுற்றிச் சுழன்று பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்கும் அங்கி ருந்து அமெரிக்காவுக்கும் “ஏப்ரல் பூல்“ விரிந்து பரவி இருக்கிறது. இது குறித்து சிக்காகோவில் உள்ள இலினாய்ஸ் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ஸ்டீவன் பேன்னிங் ஐரோப்பாவில் எப்படி எல்லாம் நடந்தது என்று விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிரகோரியன் கலண்டரை ஏற்றுக் கொண்ட முதல் நாடாக பிரான்ஸ் இருந்தாலும் இத்த கைய கேளிக்கைகளின் ஆணிவேரைக் கண்டு பிடிக்கப் போதுமான ஆதாரக் குறிப்புகள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஸ்காட்லாந்தில் அதாவது ஏப்ரல் முதலாம் திகதி வினோதமாக உடையுடுத்தி இரண்டுங்கெட்டானாக நடந்து கொண்டு ஸ்கொட்டிஷ் மக்கள் அந்த நாளை நகர்த்தியதாக மேலும் தெரிவிக்கிறார்.

பிரெஞ்சுக் குழந்தைகள்கூட காகிதத்தில் மீன் போன்று செய்து தனது சினேகிதர்களின் முது கில் ஒட்டி அனுப்பிக் கேலி செய்திருக்கின்றனர். இப்படி முதுகில் மீனோடு திரிகிற குழந்தைகளைப் பார்க்கும் குழந்தைகள் “ஏப்ரல் மீன்“ என்று அழைத்துக் கேலி செய்திருந்திருக்கின்றனர்.

1986இல் ப்ரெட் வால்டன் இயக்கிய, “ஏப்ரல் பூல்ஸ் டே“ திரைப்படம் மிகப் பிரபலமா னது. டெபோரா போர்மேன், ஜேய் பேக்கர், டெபோரா குட்ரிச் நடித்திருந்தனர். பாரமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனத்தார் பிரம்மாண்டமாக தயாரித் திருந்த இப்படம் ஒளி நாடாக்களிலும் வீர நடை போட்டு வந்ததை குறிப்பாகச் சொல்லலாம்.. ஏப்ரல் முதல் திகதி பல வேடிக்கைகள் மட்டுமல் லாது பல வினைகளும் வந்துள்ளன.

எது, எப்படி இருப்பினும் நாமும் ஏமாறுவோம். பிறரையும் எமாற்றுவோம். சந்தோசமாக இருப்போம்......



# ஹிமாச்சல் பிரதேசத்தில் நிலச்சரிவு; 6 பேர் பலி!

ஹிமாச்சல் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடும் மழையுடனான காலநிலையினால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, மரமொன்று வேருடன் சாய்ந்து அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீது விழுந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

குல்லு மாவட்டத்தில் உள்ள மணிகரன் என்ற பகுதியிலேயே நேற்று முன்தினம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் அப்பகுதியில் காணப்பட்ட மிகவும் பழமையான மரமொன்றே இவ்வாறு வேருடன் சாய்ந்து விழுந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 7 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குல்லு, மண்டி உள்ளிட்ட இடங்களில், பலத்த சூறைக்காற்றுடன் கன மழை பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் முன்னரே எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைப் பெரியாறு அணைக்கு எதிரான ‘எம்புரான்’ காட்சிகளை நீக்கவேண்டும்

## வேல்முருகன் தெரிவிப்பு



‘எம்புரான்’ திரைப்படத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும். தொடர்ந்து அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தி வரும் போக்கை மலையாள திரையுலகம் கைவிட வேண்டும்.”

– இவ்வாறு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நாகர்கோவில், தென்காசி, கம்பம், போடி, பொள்ளாச்சி, கோவை என தெற்கில் இருந்து வடக்கு வரை கணிசமாக தமிழ் நிலத்துடன் தொழில், சுற்றுலா ரீதியில் கேரள மாநிலம் தொடர்பில் இருக்கிறது. இந்த எல்லைப் பகுதிகளில் இரு மாநில மக்களுக்கும் இடையே நல்ல உறவு இருக்கிறது. உயர் கல்விக்காகவும், வேலைக்காகவும், மலையாளிகள் இடம் பெயரும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இப்படி சகோதரத்துடன் தமிழர்களும், கணிசமான மலையாளிகளும் இருந்து வரும் நிலையில், மலையாள திரைப்படங்களில் தொடர்ந்து தமிழர்களை கொச்சைப்படுத்தி வருவது என்பது கடும் கண்டனத்துக்குரியது.

மலையாள இயக்குநர்கள், நடிகர்கள், துணை நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என பலரும், சென்னையில் திரைப்பட தொழிலை கற்றுக் கொண்டு, அவர்களின் சொந்த மாநிலத்துக்கு வண்டி ஏறும்போது, கூடவே தமிழின வெறுப்பையும் சுமந்துக் கொண்டே செல்கின்றனர். இதன் காரணமாகவே, அவர்கள் பணியாற்றக்கூடிய மலையாள திரைப்படங்களில் தமிழின வெறுப்பை உமிழ்ந்து வருகின்றனர்.

மலையாள இயக்குநர் ராஜீவ் மேனன் இயக்கிய ‘கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்’ காதல் திரைப்படத்தில், இலங்கை அமைதிப்படையை ஆதரித்தும், ஈழப் போராளிகளை கொச்சைப்படுத்தும் காட்சி சம்மந்தமே இல்லாமல் திணிக்கப்பட்டிருந்தது. தென் தமிழக விவசாயிகளின் சோற்றில் மண்ணை போடும் விதமாக “முல்லைப்பெரியாறு அணையை உடைக்க வேண்டும்” என்கிற பிரச்சாரத்தை வலியுறுத்தி சோஹன் ராய் என்ற மலையாளி ‘டேம் 999’ என்ற திரைப்படத்தை இயக்கியிருந்தார்.

தமிழர்களை கொச்சைப்படுத்தி எடுக்கப்பட்ட மலையாள இயக்குநர் சந்தோஷ் சிவன் இயக்கிய ’இனம்’, ஈழத்தில் தமிழர்கள் இன அழிப்பை நியாயப்படுத்திய ‘மெட்ராஸ் கபே’ உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்கள் சான்றாக இருக்கிறது. இந்தத் திரைப்படங்களின் வரிசையில், கேரளாவின் பிரபல நடிகர் மோகன்லால் நடிப்பில் சமீபத்தில் வெளியான ‘எம்புரான்’ திரைப்படத்தில், முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்கள் இடம் பெற்றிருக்கிறது.

இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் நடிகர் பிருதிவிராஜ், படத்துக்கும் அதன் போக்கிற்கும் தொடர்பே இல்லாமல், முல்லைப் பெரியாறு அணைக்கு எதிராக வன்மத்தை காட்டியிருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது.

குறிப்பாக, நெடும்பள்ளி டேம் என்று மாற்று பெயரிட்டு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் அடங்கி இருந்த திருவிதாங்கூர் ராஜா, 999 வருடங்களுக்கு இனாமாக எழுதிக் கொடுத்தாராம். எழுதி வாங்கிய பிரிட்டிஷ்காரன் போய்விட்டானாம். மன்னராட்சியும் போய் விட்டதாம். ஆனாலும், அந்த ஆபத்து மக்களை காவு வாங்க காத்து நிற்பதாக நடிகை மஞ்சு வாரியர் பேசும் வசனம் தமிழின காழ்ப்புணர்ச்சியின் உச்சம்.

மேலும், இரண்டு ஷட்டரை திறந்தாலே, மக்கள பலிவாங்குற அணையை, அதாவதுமுல்லைப்பெரியாறுஅணையை, குண்டு வைத்து தகர்த்தால், கேரளம் மறுபடியும் தண்ணீருக்குள் மூழ்கும். அணையை காப்பாற்ற செக் டேம் எனும் சுவர்களால் பயனில்லை. அணையே இல்லாமல் இருந்தால் தான் சரி என்பன போன்ற வசனங்களும் படத்தில் இடம்பெறுகின்றன.

தமிழின வெறுப்பை உமிழும் இது போன்ற திரைப்படங்கள், தமிழ்நாடு, கேரள மாநில மக்களிடையே நீடித்து வரும் நல்லுறவை சீர்குலைத்து, இருமாநில உறவை கெடுக்கும்.

எனவே, ‘எம்புரான்’ திரைப்படத்தில், முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும். தொடர்ந்து அறிவார்ந்ததமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தி வரும் போக்கைமலையாளதிரையுலகம்கைவிட வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் எச்சரிக்கை விடுக்கிறேன்” என்று அவர் கூறியுள்ளார்.

# தேசிய துக்க வாரத்தை அறிவித்தது மியன்மாரின் ஆளும் இராணுவம்





மியன்மாரின் ஆளும் இராணுவ ஆட்சிக்குழு தேசிய துக்க வாரத்தை அறிவித்துள்ளது.

நில அதிர்வையடுத்து அந்த நாட்டில் 2,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை அந்த நாட்டில் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,056 ஆக அதிகரித்துள்ளது. 3,900 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 270 பேரை இன்னும் காணவில்லை என்று அந்நாட்டு இராணுவ ஆட்சிக் குழு தெரிவித்துள்ளது.

மியான்மரில் கடந்த வெள்ளிக்கிழமை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவாகி இருந்தது. இதன் காரணமாக, மண்டலே நகரம் உள்ளிட்ட பல பகுதிகளில் கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், தற்போது அந்த பணிகள் மந்தமாக நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

வெயிலின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால், உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கும் என கருதப்படுகிறது.

# ரமழான் பண்டிகை தினத்திலும் காசாவில் இஸ்ரேல் தாக்குதல்!



ரமழான் பண்டிகையான நேற்றும் இஸ்ரேலிய படைகள் தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

நேற்றைய தாக்குதலில் குழந்தைகள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

காஸாவின் தெற்கு நகரமான ரஃபாவிலிருந்து அல் - மவாசி நோக்கிப் பொது மக்களை இடம்பெயருமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தின் அரபு மொழி செய்தித் தொடர்பாளர் அவிச்சே அத்ரே, ரஃபாவில் இராணுவம் தீவிரமான போர் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் எனக் கூறியுள்ளார்.

காஸாவின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளில், இஸ்ரேலிய தாக்குதல்களில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர் என பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, செங்கடல் வழியாகச் செல்லும் சர்வதேச கப்பல்களைத் தாக்குவதை நிறுத்துமாறு ஏமனின் ஹவுத்திகளை கட்டாயப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

மார்ச் 15 ஆம் திகதி தொடங்கிய இந்தத் தாக்குதல்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 59 பேர் கொல்லப்பட்டனர் என ஏமனின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# புட்டினன் மீது அதிருப்தி வெளியிட்டார் ட்ரம்ப்!



உக்ரைனில் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பல வாரங்களாக முயற்சித்தன் பின்னர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தொடர்பில் தாம் அதிருப்தியடைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் இதனைக் குறிப்பிட்ட அவர், யுக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் நம்பகத்தன்மையை ரஷ்ய ஜனாதிபதி கேள்விக்கு உட்படுத்தியதால் அவர் மீது தாம் கடும் கோபம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், போர் நிறுத்தத்திற்கு அவர் உடன்படவில்லையாயின் ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 50 சதவீத வரி விதிக்கப் போவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அந்த நேர்காணலின் போது, அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஈரான் உடன்படவில்லை என்றால் ஈரான் மீது குண்டு தாக்குதல் அல்லது இரண்டாம் நிலை வரிவிதிப்பு மேற்கொள்ளப்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஈரானின் ஜனாதிபதி மசூத் பெசேஸ்கியன், அமெரிக்காவின் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஈரான் நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாது எனவும், மறைமுக பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.04.2025




இன்று மந்தமான நாளாக இருக்கும். கடினமான சவால்களை எதிர்கொள்ள நேரலாம். இறை வழிபாடு வெற்றி அளிக்கும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். நீங்கள் சவாலான சூழ்நிலைகளையும் சந்திக்க நேரலாம்.

உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் காணப்படும். நல்லுறவு பராமரிக்க நீங்கள் பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதுமானதாக காணப்படாது.தவிர்க்க முடியாத மருத்துவ செலவுகள் காணப்படும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். காரமான மற்றும் இனிப்பான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்கலாம். உங்கள் கடின உழைப்பு நல்ல பலன்களை பெற்றுத் தரும்.நன் மதிப்பு பெருகும்.

உங்கள் பணிகளில் வெற்றி காண இயலும். என்றாலும் நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் சில ஆரம்ப கால தடைகள் காணப்படும். இது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்துக்குச் செல்லும்.

அனுசரித்து போவதன் மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் காணலாம். பெரியவர்களின் ஆலோசனை பின்பற்றுவது நல்லது.

உங்கள் தேவைகளை சமாளிக்க போதிய அளவு பணம் கிடைக்கும். என்றாலும் உங்கள் குடும்ப காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று வளமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இன்று பல முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு நீங்கள் பாராட்டு பெறுவீர்கள்.

குடும்பத்தில் அமைதி காணப்படும். உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் குடும்பத்தின் பிற உறுப்பினர்களிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சிறந்த சேமிப்பை பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியமான வாழ்விற்கான சூழ்நிலை காணப்படும்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உங்கள் கவனத்தை திசை திருப்புங்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சிப்பூர்வமாக இருப்பதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. இன்றைய சூழ்நிலையை நீங்கள் அமைதியாக கையாள வேண்டும்.

நீங்கள் சேவை மனப்பான்மையோடு பணி புரிவதால் உங்களின் முன்ஜாக்கிரதை உணர்வு உங்களுக்கு சாதகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொண்டு தவறுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.

குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிப்பதில் சற்று கடினம் காணப்படும். சிறந்த அணுகுமுறை மூலம் சிறந்த குடும்ப மதிப்பை பெறலாம்.




இன்று அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இன்று சில பதற்றமான சூழ்நிலை காணப்படும். குல தெய்வ வழிபாடு மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக அமையாது.

நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் மோதல்கள் காணப்படும். உங்கள் துணையுடன் பழகும் போது அமைதியை மேற்கொள்ளவும்.

நீங்கள் செலவுகளை தவிர்க்க இயலாது. கவனமுடன் செலவு செய்வது சிறந்தது.

ஆரோக்கியம் மிதமாக காணப்படும். கண் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு மிகவும் சிறப்பான நாள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் அதில் வெற்றி பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்தித்து அவர்களின் நட்பை பெறுவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் திருப்தியான பலன்களை நீங்கள் காணலாம். உங்கள் பணிகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் அன்பை வெளிப்படுத்த இது உகந்த நாள். நீங்கள் உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதி நிலைமை காணப்படும். நீங்கள் சிறிது பணம் சேமிப்பீர்கள்.

நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். இன்று எழும் எந்த சூழ்நிலையையும் சந்திக்கும் உறுதி மற்றும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். நீங்கள் செய்யும் பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான சொல்லிலும் செயலிலும் இனிமை உணர்வை வெளிபடுதுவீர்கள். இது உறவின் மதிப்பை உயர்த்தும்.

நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். நீங்கள் சிறிது பணம் சேமிப்பீர்கள்.

இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் விவேகத்துடன் சிந்தித்து செயல்பட வேண்டும். அதிகமாக யோசிப்பதை தவிர்க்க வேண்டும். பாதகமான சூழ்நிலைகள் ஏற்படும் எனபதால் உங்கள் செயல்களை கவனமாகச் செய்ய வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது.

காதலின் நடவடிக்கைகளை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையுடனான உறவு நல்லுறவாக இருக்க இது மிகவும் அவசியம்.

இன்று கையில் போதிய அளவு பணம் காணப்படாது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

அதிகமாக உணர்ச்சி வசப்படுவதையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.04.2025




இன்று மந்தமான நாளாக இருக்கும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். நீங்கள் பணி மாற்றம் விரும்புவீர்கள். இதனால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

நீங்கள் உங்கள துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய உணர்வை நீங்கள் தவிர்த்து மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. கூடுதலான தேவையற்ற செலவுகள் காணப்படும்.

குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று அதிக எதிர்பார்ப்புடன் இருக்காதீர்கள். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் பொது விழாக்களில் கலந்து கொள்வதும் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

முறையாக திட்டமிட்டு பணியாற்ற இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று காதல் விவகாரங்களுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் தேவையில்லாத சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் பணத்தை வீனாக்குவீர்கள். பணத்தை சேமிக்க இயலாது. தேவையற்ற செலவுகள் காணப்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியம் குறித்து கவலைப் படுவீர்கள்.




இன்று உங்களுக்கு துடிப்பான நாளாக இருக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரினளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சில உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பண வரவு சீராக இருக்கும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று அமைதி தேவையெனில் தைரியம் உறுதி மற்றும் நம்பிக்கை அவசியம்.

இன்று உங்களுக்கு அதிக பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். பணிகளை மேற்கொள்ளும் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணத்தில் கவனம் தேவை.

பதற்றம் காரணமாக செரிமானம் மற்றும் தலைவலி பிரச்சினை காணப்படும்.



# சந்திரசேகரப்பிள்ளையார் இன்று கொடியேற்றம்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (01) காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை கைலாசவாகன திருவிழாவும் 13 ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.